# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1640/17 - 2010 පෙබරවාරි 10 වැනි බදාදා - 2010.02.10

*1640/17 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 104/44.*

**நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம் (87 ஆம் அத்தியாயம்)**

*114 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

"செவிப்புலனற்றோருக்கான கலாநிதி றயின்செஸ் பாடசாலை நம்பிக்கைப் பொறுப்பின்" நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அதாவது-

1. நீதிபதி, கிறிஸ்தோபர் கிரேகொரி வீரமந்திரி,
2. கலாநிதி நீதியரசர் அந்தோனி ரஞ்சித் பீவிஸ் அமரசிங்க,
3. திரு. அம்பலாங்கொட குருண்ணன்சேலாகே லக்ஷ்மன் பெரேரா,
4. திரு. சந்திரசோமா விக்ரமபால குணசேக்கர,
5. திரு. உபாலி இந்திரஜித் பெரேரா விக்ரமரட்ண,
6. திரு. மாபாலகம கொட்டேஜ் சிறீ சுசிறிபால த சில்வா,
7. திருமதி கிறிஸ்டினா யோசபினா மரியா த சில்வா,
8. திரு. வில்லி ஹென்ரிக் மரியா இன்பேர்ஸ் ; அத்துடன்
9. திருமதி பிரான்சிஸ்கா அமேலியா மரியா மெலீவ்

ஆகியோர் (87 ஆம் அத்தியாயம்) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சருக்கு அவர்களது கூட்டிணைப்புக்கென விண்ணப்பித்துள்ளார்களாதலால்,

ஆகவே, இப்போது, மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகிய நான், இக்கட்டளைமூலம் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டிணைப்புக்கு அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன் பின்வருவனவற்றைச் செய்யுமாறு பணித்து வெளிப்படுத்துகிறேன்:-

(அ) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபன விதிகளின்கீழும் அத்துடன் கொட்டாவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கிரந்தி அமரசேகர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, பெப்புருவரி 13 ஆந் திகதிய 6921 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகையின் கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்டவர்களான அவர்களது அடுத்துறுவோரும் "செவிப்புலனற்றோருக்கான கலாநிதி றயின்செஸ் பாடசாலை நம்பிக்கைப் பொறுப்பு" என்னும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் எனவும் ;

(ஆ) சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் சார்பில் ஏதேனும் விவரணத்தினதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெற்றுக்கொள்ளலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், குத்தகைக்கு விடலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் எனவும் ; அத்துடன்

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பில் எழும் எல்லா வழக்குகளிலும் வழக்கு காரணங்களிலும் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தைக் கொண்டு இலங்கையில் அல்லது வேறெங்காயினுமுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும், வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடை பகர்வதற்கும் விடை பகரப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டப்படி இயன்றவர்களும் தகுதியானவர்களுமாதலும் வேண்டும்.

இக்கட்டளை இல்லாதொழிக்கப்படலாம் அல்லது எனக்கு அவசியமானதெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

மிலிந்த மொறகொட,
நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2009, திசெம்பர் 26.

2- 587

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.